# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*




## தனிமையில் சுமையா? நுகத்தில் 'பிதாவை ஏற்பது' இலகுவானது!

**வ**ருத்தமான வாழ்வின் பாரங்கள் பல உண்டு! ஆவிக்குரிய தோல்வியான பாரங்களோ, உலக வாழ்வின் பாரங்களோ.... அவைகளை 'நாமே' சுமப்பது மனசோர்வையும், இளைப்பையும் தருவது நிச்சயம்! ஆனால், இயேசு தரும் மகிழ்ச்சியான செய்தியோ "என் நுகம்" என்ற 'இரு காளைகள்' பூட்டும் வண்டிக்கு, தன் ஜீவியத்தை ஒப்பிட்டார்! (மத்.11:29). 'ஒற்றையாய்' தான் சுமக்காமல் 'இரட்டையாய்' வெளிப்படுத்தி காண்பித்தார் இயேசு! இவ்வுலக துன்ப பாதையில் இயேசு, தனியாய் இல்லாமல், தன்னோடு பிதாவை அறிந்து வாழ்ந்ததை, முந்தின 27-ம் வசனத்தில் கூறினார்! அவரது நுகத்தில் கூடவே 'பிதா' இருந்தார்! இப்போது, அந்த நுகத்தையே நமக்கு அறிமுகப்படுத்தி, அவர் பெற்றதைப்போலவே 'பிதாவை' துணையாய் பெறும்படி அழைக்கிறார். ஆ, இப்போது நம் கடின வாழ்வின் சுமை மெதுவாயும், இலகுவாயும் மாறிவிட்டதே! யாருக்கெல்லாம் 'பிதா' வெளிப்பட்டாரோ, அவர்கள் பாக்கியவான்கள்! இயேசு வாழ்ந்ததுபோலவே இப்பூமியில் அவர்கள் அநாதைகளல்ல (ஒற்றையல்ல).... சொந்த பிதாவை 'இரட்டையாய்' நுகத்தில் பெற்றவர்கள்!!

*-tr*

பெட்டகம் 22 | மார்ச் 2020 | பரல்கள் 3



## 'சீஷத்துவம் காக்கும்' உத்தம சபை வேண்டும்!

தங்கள் 'தேவைக்கேற்ப' கையில் அள்ளி குடிக்காமல், உலக தாகத்திற்கு "முழங்கால் ஊன்றி" குடித்த திரளான ஜனங்களை வீட்டிற்கு அனுப்பிவிட்டான், கிதியோன்! (நியா.7:5). தனக்குண்டான யாவற்றையும் வெறுத்துவிடாமல் 'சீஷத்துவம்' இல்லை... "என்ன, நீங்களும் போய்விட மனதானீர்களோ" என பன்னிருவரையும் உலுப்பிவிட்டார் இயேசு! (யோ.6:66,67). சரித்திர சக்கரம் ஓடி முடியப்போகும் இந்நாட்களில், எருசலேம் தூய சபையில் "மீதியானவர்கள்" இருப்பார்கள் என மகிழ்கிறது வெளிப்படுத்தின விசேஷம்!

கேளுங்கள் சபை மாந்தரே கேளுங்கள்: வெற்றிக்கு அடிப்படையை "எண்ணிக்கை அதிகம் கொண்ட சபைக்கு" ஒப்பிடவே கூடாது! ஏனெனில், கட்டிடம் ஜனங்களால் நிரம்பியிருப்பதைவிட, அங்கும் இங்கும் "காலியாய் இருக்கும்" இடங்களில் அதிக ஆசீர்வாதம் அமர்ந்திருக்க முடியும்! ஏன் தெரியுமா? உணர்வுள்ள ஓர் சபையில், வருடா வருடம் எண்ணிக்கை குறைந்தால் "அதுவே" அங்குள்ள ஊழியன் மகா உத்தமம் நிறைந்தவன் என்பதற்கு ஆதாரம்! ஆம், அந்த ஊழியன் யாதொரு "பிரபல்ய உபதேசங்களுக்கும்" பலியாகவில்லை! அல்லது, "தீமைகளை விட்டுவைத்தும்" திரள் கூட்டத்தை சேர்த்திடவில்லை!

எங்கே உள்ளது அந்த உத்தம சபை? அதை, இயேசுவின் சீஷத்துவ வீரர்களே தேடிப் பிடித்து அமர்வர்!

*-Ed*


'பரலோக பொக்கிஷங்கள்' வருடசந்தா ரூ.150.00
ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் வீதம் ரூ.125.00 அயல்நாட்டு சந்தா ரூ.900.00

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP**, Indian Bank - Koodal Nagar Branch
A/c no: **502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, tamil.cfcindia.com
You Tube : paralogapokkishangal, CFCMadurai

## சபையை குடும்பமாய் உணர்வதே, சிறந்த பக்தி!

ஆதாமுடைய விலாஎலும்பை, அவனுடைய இருதயத்திற்கு அருகிலிருந்தே தேவன் எடுத்தார். அது ஏனென்றால், ஏவாளைத் தன் இருதயத்திற்கு அருகில் வைத்து, ஆதாம் அவளை அன்புடன் பராமரித்து பாதுகாத்திடவே அவ்வாறு செய்தார்!

சிறந்த சத்தியங்களை உள்ளடக்கியே, இந்த நிகழ்ச்சிகள் யாவையும் தேவன் செய்திருந்தார். ஆதியாகமம் 2:21-ம் வசனத்தின்படி, ஆதாமின் விலா எலும்பை தேவன் எடுத்த பிறகு, அந்த இடத்தை சதையினால் மூடி விட்டார்.

**விலா எலும்பு எடுக்கப்பட்ட அந்த இடம் காலி இடமாகவே இருந்ததை ஆதாம் அறிந்திருந்தான். அந்த வெற்றிடத்தை ஏவாள் மாத்திரமே நிரப்பிட முடியும்.**

ஏனெனில், அவள்தான் அந்த விலாவிலிருந்து எடுக்கப் பட்டவள்! இன்றும்கூட, யூத போதகர்கள் கூறும்போது "தன் ஒரு விலா எலும்பு குறைந்தது அறிந்த மனிதன், தவிப்பிற்கு உள்ளாகிறான்! அதேபோல், ஒரு மனுஷி எங்கு இருந்து எடுக்கப்பட்டாளோ அந்த மனுஷனுடைய விலா அருகில் சேரும்வரை தவிப்படைகிறாள்!" என போதிக்கிறார்கள். இதுபோன்ற உறவைத்தான், கணவனி டமும் மனைவியிடமும் தேவன் விரும்புகிறார்.

**இவ்வித ஐக்கியத்தின் மூலமாகவே, தேவனுடைய வல்லமை வெளிப் பட்டு அவருடைய நோக்கம் அவர்களிடம் நிறைவேறிட முடியும்!**

கணவன் மனைவி உறவைக் குறித்து பேசும்போது, நம் ஆண்டவராகிய இயேசுவும், அப்போஸ்தலனாகிய பவுலும் ஆதியாகமம் 2-ம் அதிகாரத்தை குறிப்பிட்டே பேசியிருக்கி றார்கள் (மத்தேயு 19:3-9; எபே.5:22-33). ஆகவே கிறிஸ்தவ திருமணத்தைக் குறித்த மெய்யான அணுகுமுறைக்கு ஆதியாகம புத்தகத்தின் இந்த அதிகாரங்களின் போதனை மிக மிக முக்கியமாகும்.

**திருமணத்தின் நோக்கம் - குடும்பம் ஸ்தாபிக்கப்பட வேண்டும்:**

முதல் திருமணத்தில், புதிய தம்பதிகளாகிவிட்ட ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவன் கூறிய முதல் வார்த்தை என்னவெனில் "நீங்கள் பலுகிப் பெருகுங்கள்" என்ற வார்த்தை ஆகும் (ஆதி.1:28). இவ்வாறு பிள்ளைகளைப் பெற்றெடுத்து, குடும்பம்

*ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்பதே திருமணத்தைப் பற்றி தேவன் வைத்திருந்த நியமனம் ஆகும். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே பாலிய உறவின் 'உந்து விசையை' தேவன் மனிதனுக்குள் சிருஷ்டித்திருந்தார்!*

*தேவனை தொழுதுகொள்ளும் இடமாகவும், அவருக்குப் பணி விடை செய்யும் இடமாகவும், இருப்பதை வலியுறுத்தியே வேதாகமம்* **குடும்பத்தை** *பிரதானமாய் சித்தரிக்கிறது. ஒரு குடும்பம் தேவனை தலைவராய் வைத்து, அவருக்கு கீழாய் ஒழுங்கு செய்யப்படும் வாழ்க்கையே தேவனுக்கு அதிக மகிமையை கொண்டு வந்து சேர்க்கும்! தேவன் நமக்குப் பிள்ளைகளை அருளுவது, நம்முடைய இருதயத்தை களிப்படையச் செய்வதற்கு மாத்திரமல்லாமல், அவர்களை கர்த்தருக் கேற்ற பயத்தில் வளர்த்து, அதன் மூலமாய், 'அவர்கள் சந்ததியில்' உண்மையுள்ள சாட்சிகளாய் இருப்பதற்குமே ஆகும். இந்த அவரது நோக்கம், வேதாகமத்தில் திரும்பத்திரும்ப வலியுறுத்தப்பட்டிருக்கிறது (சங் 78:5-7).*

**தேவனை மகிமைப்படுத்தும்படியான ஒரு குடும்பத்தைக் கட்டுவதும், அவருடைய உண்மைக்கும் அவருடைய அன்பான பராமரிப்பிற்கும் அந்த குடும்பம் சாட்சியாய் விளங்குவதும், ஒவ்வொரு கிறிஸ்தவ தம்பதியினர் மீதும் விழுந்த அழைப்பு ஆகும்!**

*ஒரு மனிதன் பிரசங்கிப்பதைவிட, கர்த்தருடைய வழியில் நடக்கும் அவர்களுடைய பிள்ளைகளே.... அவர்களது, பிரசங்கத்தின் வலிமையாய் இருக்கிறது! ஆபிரகாம் தன் பிள்ளைகளை தேவ பக்தியுள்ள வழியில் நடத்தியதற்காக, கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார் என்றும்! அவ்வாறு நடத்திடாத ஏலியை கர்த்தர் சபித்தார் என்றும்! நாம் காண்பது.... பிள்ளைகளின் வளர்ப்பிற்கு, தேவன் எவ்வளவு முக்கியத்துவம் தந்திருக்கிறார் என்பதை நாம் அறிய முடிகிறது! (ஆதி:18-19; 1சாமு.13:13,14).*

*இதே முக்கியத்துவம், புதிய ஏற்பாட்டிலும் போதிக்கப்படுகிறது. எபேசு நிருபத்தில் "***சபையின் மாபெரும் இரகசியமாய் இருப்பது, அது கிறிஸ்துவின் சரீரம்...***" என முதல் மூன்று அதிகாரங்களில் விவரித்த பின்பு, இந்த சத்தியத்தின் நடைமுறை விளக்கத்தை ஒரு கிறிஸ்தவ குடும்பத்தின் உறவிலிருந்துதான் காணப்பட முடியும் என பவுல் தெளிவுபடுத்தினார். ஆம், கணவன் மனைவி, பெற்றோர் பிள்ளைகள், மற்றும் எஜமான் வேலைக்காரன் ஆகியோரின் சாட்சியில் புலப்பட வேண்டும் என விவரித்தார் (எபே.5:22; 6:9). இவ்வாறு, ஒரு குடும்பத்தை பிரதானமாய் வைத்து கூறினாரே அல்லாமல்.... ஒரு ஸ்தல சபையை பவுல் இங்கு குறிப்பிடாதது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்!*

**ஆம், தேவனுடைய பார்வையில் பிரதானமாய் விளங்குவதெல்லாம் "ஒரு கிறிஸ்தவ குடும்பத்தின் சாட்சிதான்!" என நேர்த்தியாய் சுட்டி காட்டப் பட்டிருக்கிறது. ஒரு குடும்பம் வலிமையாய் இருந்தால் மாத்திரமே, ஒரு ஸ்தல சபையும் வலிமையாய் இருந்திட முடியும்!**

*ஒரு கிறிஸ்தவ இல்லத்தில், ஆவிக்குரிய சிறந்த சூழ்நிலை இல்லாது போனால், அந்த ஸ்தல சபையும் நிச்சயமாய் வீழ்ச்சியடையும்!*

*காரியம் இவ்வாறாக இருப்பதனிமித்தமே,* **சாத்தானுடைய கடும் தாக்குதல்கள், முன்னணியில் இருக்கும் குடும்பத்தின் மீது ஏற்படும்** *என நாம் எதிர்பார்ப்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை! தேவன் அமைத்த முதலாவது குடும்பத்தில், குற்றம் சாட்டுதலையும், பொறாமையையும், பகையையும், கொலையையும் சாத்தான் கொண்டு வந்தான்! (ஆதி.3:12;4:8). அந்த நாள் ஆதிமுதற்கொண்டு, இன்றுவரை ஒரு தேவபக்தியுள்ள குடும்பத்தைக்கூட சாத்தான் விட்டு வைத்ததில்லை! எனவேதான், எபேசியர் நிருபத்தில் ஒரு நல்ல கிறிஸ்தவ குடும்பத்தின் காரியங்களை கூறியபிறகு.... உடனடியாக,* **ஆவிக்குரிய யுத்தத்தின் பகுதியை எடுத்துக் காட்டுகிறது!** *(எபே.6:10-18).*

**இதன் மூலம் நாம் எச்சரிக்கப்படுவது யாதெனில், ஒரு பக்தியுள்ள குடும்பத்தை நாம் கட்டுவதற்கு பிரயாசப்படும் ஒவ்வொரு முயற்சியையும் சாத்தான் கண்டிப்பாய் எதிர்த்து நிற்பான் என அறிவதே ஆகும்!**

*ஆகிலும், சாத்தானின் ஒவ்வொரு கொடிய தாக்குதலையும் மேற்கொள்வதற்கென தேவன் நமக்கு "சர்வாயுதவர்க்கத்தையும்" தந்தருளியுள்ளார்! என்பதை நாம் மறந்திடலாகாது! இவ்வாறு உறுதியாக ஸ்தாபிக்கப்படும் ஒரு குடும்பமே தேவனை மகிமைப் படுத்தும்! என்பதும், இதுவே திருமண வாழ்வின் பிரதான நோக்கம் என்பதும், எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லாமல் தெளிவாகிறது!*

*உங்கள் திருமண வாழ்வின் நோக்கம்: மெய்யாகவே வேத வாக்கியங்களின்படி இருக்குமென்றால், உங்களைக் குறித்த தேவனுடைய பரிபூரண சித்தத்திற்குள் அவர் நடத்துவது மாத்திர மல்லாமல்.... அதுபோன்ற ஒரு நல்ல இல்லம் கட்டப்படுவதற்கு தேவையான பெலனையும் அளிப்பார்!*

*"குடும்பம் கட்டப்பட வேண்டும்" என்ற மெய்யான விருப்பம் கொண்ட தம்பதியர், தங்கள் சபையும் தேவனுடைய குடும்பம் என்ற உணர்வை நிச்சயம் பெற்றிருப்பார்கள்! அவ்வித குடும்பமே சபையில் "பக்தியான குடும்பம்" என போற்றப்பட முடியும்!*

## அவர் ஜீவனுக்குள் பிரவேசிக்க 'என் ஜீவன் இழப்பது' பொருட்டல்ல!

*கடந்து வந்த என் ஜீவியத்தில், என் ஜீவியத்திற்கு ஆதரவாயிருந்த சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்கள் யாவையும் நான் இழந்தேன்! அதோடு சேர்த்து எனக்கு ஆதரவாயிருந்த 'திவ்விய சமாதானம் கூட' என்னை விட்டு தூரமானதைப்போல் கண்டேன். இப்போது நான் நின்ற ஸ்தலத்தில் ஆதரவு என சொல்லிக்கொள்ள யாதொன்றும் இல்லாத படியால் 'என் ஆத்தும சிநேகிதருக்கு முன்பாக' சாஷ்டாங்கமாய் விழுந்தேன்! ஆதரவைப் போல் தோன்றிய சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்கள், என்னை 'நித்திய ஆதரவிலிருந்து' பிரிக்க வகை தேடிய தந்திரத்தை உணர்ந்தேன்.*

**அந்த சிருஷ்டிக்கப்பட்ட ஆதரவுகள், தேவனால் எனக்கு தரப்பட்டதாயிருந்தாலும், அவைகளை நான் இழந்த ஆசீர்வதிக்கப்பட்ட நிலையில் "கொடுத்தவரை" இறுகப் பற்றிக்கொண்டேன்.**

*"ஓ என் நேசரே, உணர்வு பூர்வமான எல்லா இழப்பிலும், அறிவு பூர்வமாய் நீர் என்னோடு இல்லாததுபோல் காணப்பட்ட உணர்விலும் 'என் ஜீவனை இழந்து, உம்மை எனக்குள் கண்டறிந்தேன்' இவ்வித இணைந்த ஐக்கியம், உம்மிலிருந்து என்னை எதுவும் பிரிக்க இயலாது! என கண்டு, உள்ளம் புளகாங்கிதம் அடைகிறேன்!" என கண்ணீர் மல்க அவரை இறுகப்பிடித்துக் கொண்டேன்.*

*"சிருஷ்டிக்கப்பட்டோரே, தேவன் தந்த ஈவுகளில் மனதை வைத்து அவைகளே மகிழ்ச்சி எனவும், ஆசீர்வதிக்கப்பட்டது எனவும் நீங்கள் தேங்கி நிற்கும் உங்களைக் கண்டு, உள்ளம் பரிதபிக்கிறேன்! இப்படி யொரு 'முற்றுப்புள்ளியை' பெற்றுக்கொண்டதை அணைத்துக் கொண்டு நின்று விடுவது சரியோ? அந்தோ, மெய்யான இளைப் பாறுதல் உங்களுக்கு நின்றுவிட்டதே! தேவனை இன்னும் கிட்டிச் சேரும் பாக்கியமும் நின்று விட்டதே! 'சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்கள்' அதுவே என் ஆசீர்வாதங்கள் என நீங்கள் திருப்தி கொண்ட அந்த அனைத்தின் இழப்பிலிருந்தே 'தேவனோடு கொண்ட ஐக்கியத்தின்' இனிமை புதைந்து கிடக்கிறது!*

*இன்னும் சிலர் "சொந்த ஜீவனை இழப்பதற்குரிய மணவாள அழைப்பை பெற்றுவிட்டு" காலமெல்லாம் 'ஜீவனை இழக்கும்' துயரத்தில் மூழ்கி, அந்த இழந்த நஷ்டத்தையே எண்ணி எண்ணி, உள்ளான துயரத்தில் அமிழ்ந்துபோய் 'மரணத்திலிருந்து தேவனுக்குள் பிரவேசிக்கும்' இனிமையை நஷ்டமாக்கி கிடக்கிறார்கள். அவர்களையே அறியாமல், ஏதோ சில சுயத்தின் பிடியில் சிக்கிக்*

*கொண்டு அதை விட்டுவிட முடியாமல் தவிக்கிறார்கள். தேவன் அவர்களுக்கென வைத்திருக்கும் வரைபடத்தின் தீர்மானத்திற்குள் பிரவேசிக்கும் வாசலில் தேங்கி நின்று, தங்கள் முழுமையையும் இழக்காமல் இருக்கிறார்கள்.*

**அந்தோ, அவருடைய பரிபூரணத்தின் பிரசன்னத்திலிருக்கும் நித்திய பேரின்பத்தை அனுபவிக்காமலே 'ஜீவனுக்கு அந்நியராய்' தேங்கி விட்டார்கள்!**

*"ஓ என் கர்த்தாவே, என்னுடைய செல்வந்தமான குடும்பத்தில், என் அமைதியை குலைக்கும் யாதொரு சூழ்நிலையும் இல்லாத என் தனிமையான இளமை பருவத்தில் 'மெய்யான சந்தோஷம் எது? என்பதை' நான் பருகிடவில்லை. என் இளமை பருவத்தில், தெய்வ அமைதிக்கும், சாந்தத்திற்கும் உள்ள மதிப்பை அறியாதவளா யிருந்தேன். அது ஏனெனில், ஒரு பணக்கார சொகுசு வாழ்க்கை வாழ்ந்ததே அதற்கு காரணம் என எண்ணுகிறேன். அரண்மனையிலிருந்த மலர் தோட்டத்திற்கு உலாவி வருவதையே மகிழ்ச்சி என அறிந்திருந்தேன்.*

**இப்படியொரு, மானிடத்துக்குரிய மகிழ்ச்சியில் தவழ்ந்த நான், அந்த நாட்களுக்கு ஈடாக, கர்த்தாவே நீர் என்னை கிருபையாய் துன்பத்தின் நாட்களை தந்துள்ளீர்!**

*அன்று உம்முடைய தாசனாகிய யோபுவினிடத்தில் கிரியை நடப்பித்ததைப் போலவே, என்னோடும் இடைப்பட்டீர்! உம் தாசன் யோபுவிற்கு 'அவர் இழந்ததற்கு ஈடாக' இரட்டத்தனையாய் பெறும்படி செய்தீர்! அதுபோலவே, உமது அடியாளாகிய எனக்கு, உம்மையும், உம்முடைய ஜீவனையும் இரட்டத்தனையாய் தந்தருளி, நான் அனுபவித்த ஏராளமான சிலுவையின் பாடுகளிலிருந்து ஜெயித்து வர கிருபை செய்தீர்!" என ஜெபித்து கர்த்தருடைய செய்கையின் மகத்துவத்தில் மூழ்கி மகிழ்ந்தேன்! "ஓ, கர்த்தாவே நீர் என்னில் பொதிந்து வைத்திருக்கும் உன்னத ஆசீர்வாதங்களுக்கு நன்றி! அதைக் கொண்டு என்னிடத்தில் வருகிற ஒவ்வொருவருக்கும் 'தாகம் தீர்க்கும்' ஜீவனை அருளி ஆசீர்வதித்திருக்கிறீர்" என, என் நன்றியின் இருதயத்தை மீண்டுமாய் சமர்ப்பித்தேன்!*

*– மேடம் குயான்*

---

## சட்டதிட்டத்தை விட 'மன இரக்கமே' மேலானது!

*நீங்கள் தேவனுடைய பிள்ளையாய் இருந்துகொண்டே 'இரக்கமற்ற இருதயம் கொண்டவர்களாயும்' இருந்திட முடியும் என்பதை அறிந்திருக்கிறீர்களா? பேதுரு தன் நிருபத்தில், கிறிஸ்தவ விசுவாசிகளைப் பார்த்து, "ஒருவருக்கொருவர் இரக்கத்தால்*

*நிறைந்திருங்கள்"* என கூறிய புத்திமதியில், **'நம்முடைய இருதயத்தில்' இரக்கம் நிறைந்திருக்க வேண்டும்** என்பதையே கூறினார். ஆகவே, ஒரு மார்க்கம் அல்லது ஒரு மெய்யான சபை என ஒன்று இருந்தால், அந்த சபை நம்மை இன்னும் அதிகமாய் மென்மையான இரக்க இருதயம் கொண்டவர்களாய் மாற்றும்! கரிசனை காட்டச்செய்யும்! தயவுள்ளவர்களாய் மாற்றும்! இதுபோன்ற செயல் நடைபெறவில்லையென்றால், இதற்கு எதிர்ப்பதமாய் 'கடின நெஞ்சம்' கொண்டவர்களாய் மாறுவார்கள்!

"சட்டபூர்வமாய்" என்ற அடிப்படையில் சரித்திரம் நமக்கு காண்பித்த உண்மை என்னவென்றால், அதன் முடிவு மோசமான கொடூரமும்! மரணமும்! சம்பவித்திருக்கிறது. ஒவ்வொரு சமயங்களிலும், நிகழ்ச்சிகளிலும் எனக்கென்று ஒரு கேள்வியை வைத்திருக்கிறேன்: அது என்னவென்றால், "சட்டபூர்வமாகவா? அல்லது ஜனங்களின் சார்பாகவா?" என்ற கேள்வியேயாகும்.

அமெரிக்க அரசாங்கத்தின் சரித்திரத்தில், உன்னதமான அமெரிக்க பிரஸிடண்டுகளுக்கு நாங்கள் அதிக மரியாதை செலுத்துகிறோம். அந்த வரிசையில் முதல் ஜனாதிபதியாகவும், இரண்டாவது ஜனாதிபதியாகவும் தொடர்ந்த ஆபிரகாம் லிங்கன் அவர்களே ஆவர்.

**அவரை அமெரிக்க தேசத்தினர் மகா கனம் பொருந்திய 'ஆபி - Abe' என்றே மதிப்புடன் அழைப்பார்கள். அப்படி ஒரு வரத்தை அவர் பெற்றிருந்தார். அந்த வரம் என்னவென்றால், ஜீவியத்தின் ரசனையான உணர்வும்! பிறர் துன்பத்தில் மிகத்துரிதமாய் கண்ணீர் வடிக்கும் அவரது இருதயமுமேயாகும்!**

அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் நடந்த சமயம், ராணுவ தலைவர்கள் துரிதமான பயிற்சியை, 'தேர்ந்தெடுத்த' வாலிபர்களுக்கு அளித்து, போர்களத்தின் முன்னணியில் அனுப்பினார்கள். துப்பாக்கி வெடிச்சத்தத்திற்கும், இரத்த வெள்ளத்தில் ஜனங்கள் மரிப்பதையும் கண்டு மிரட்சியுற்ற சில வாலிப பையன்கள், இராணுவத்திலிருந்து தப்பிஓட முயற்சித்தபோது கைது செய்யப்பட்டார்கள்! விதிமுறையை மீறிய அந்த வாலிபர்களுக்கு இராணுவ அதிகாரிகள் **'சட்டப்படி' மரண தண்டனை** விதித்தார்கள். ஏராளமான கடமைகளில் பாரம் கொண்ட லிங்கன் அவர்கள், தண்டனை சாட்டப்பட்டவர்களின் கோப்பு-பதிவை உருவி எடுத்தார். அவருடைய முகம் மகா வேதனையினால் சுருங்கிப்போயிருந்தது. அவர் கூட இருந்த உதவியாளர், 'நாளை கொல்லப்பட போகும் தண்டனைக்குரிய ஒவ்வொரு நபருக்கு கீழாகவும்' ஏதோ எழுதிக்கொண்டிருந்ததைக் கண்டார்! அருகிலிருந்த அவரது உதவியாளர் "பிரஸிடண்ட், கோப்பு பதிவில் என்ன

எழுதுகிறீர்கள்?'' எனக்கேட்டார். அதற்கு அவர் என் இராணுவ படையில் "இன்று கொலை நிகழும் நாள்! என சுட்டுக் கொல்லப்பட போகும் ஒவ்வொரு வாலிப பையன் பெயருக்கு கீழாகவும் எழுது கிறேன்'' எனக் கூறினார். இதைக் காணும் இராணுவ அதிகாரிகள் "**என் பையன்களை**'' சுட்டுவிடாமல் இருப்பதற்கு இரக்கம் காட்டுவார்கள் என்று நம்புகிறேன் எனவும் கூறினார்.

நாங்கள் ஆபிரகாம் லிங்கன் அவர்களை நினைவுகூரும்நாள் வரும் போதெல்லாம் 'அவரது அன்பின் ஆவியை' நினைவுகூர்ந்தே, அவரை கனம் செய்கிறோம். அவர் தம்முடைய ஜனங்களை அதிகமாய் நேசித்தார். மிகுதியான இரக்கம் தேவைப்படும் ஜனங்களிடம் விரைந்து சென்று இரக்கம் காட்டுவதற்கும், தன்னுடைய ஜனாதிபதி பதவியை ஒரு பொருட்டாய் அவர் எண்ணியதில்லை. "ஆபிரகாம் லிங்கன் ஒரு மாபெரும் உத்தம கிறிஸ்தவன்!'' என போற்றி புகழ, அவருக்கு நான் நியாயாதிபதி அல்ல. கர்த்தரின் ஊழியனாகிய நான் "**சத்தியத்தை காலில் மிதித்துவிட்டு**'' **இரக்கம் பாராட்டுவதை** ஏற்றுக்கொள்வ தில்லை! ஆனால், எந்த ஒரு கிறிஸ்தவனும் அவரிடத்தில் சென்று, அவரிடமிருந்த மன இரக்கத்தை, ஏராளமாய் கடன் வாங்கி வர முடியும் என்றே நான் திட்டமாய் கூறுவேன். அவர் சட்ட திட்டத்தை விட ஜனங்களை முன் வைத்தார்! இரக்கமுள்ள மனிதர்! அன்பு இருதயம் கொண்டவர்! என்பதில் எனக்கு யாதொரு சந்தேகமும் இல்லை!

இப்போது இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பாருங்கள். அவர் வடித்த அனைத்து கற்பனைகளிலும் 'தெய்வ அன்பு' வழிந்து ஓடுவதைக் காணலாம். **ஒரு கன்னியின் வயிற்றில் உதித்தது முதல் கொல்கொதா சிலுவை வரை, இந்த சத்தியவான் மனுக்குலத்தின் மீது மனதுருக்கம் கொண்டவராயிருந்தார்.** இதுவே கிறிஸ்தவர்களாகிய நம் யாவருக்கும் இருக்க வேண்டிய உத்தம பண்பு!

– A.W. டோசர்

---

## அவரை கண்டவன், மாற்றம் பெறுவான்!

ஆண்டவர் நம்முடைய இருதயத்திற்கு அருகில் வந்து விட்டால் நம் ஆத்துமா நடுங்கி விடும்! அந்த நடுங்கும் ஆத்துமா "அருகில் வந்த ஆண்டவர், நிச்சயம் என்னை சோதித்தறிவார்'' என்ற எண்ணத்தை பெற்றிருக்கும். இதுபோன்ற சமயத்தில், யோபு தன் ஆண்டவருக்கு எவ்வாறு பதில் கூறினார் என்பதை மறவாதீர்கள்: "என் காதினால் உம்மை குறித்துக் கேள்விப்பட்டேன்; **இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது.** ஆகையால் நான் என்னை அருவருத்து, தூளிலும்

*சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன்" என்று கூறினார் (யோபு.42:5,6).*

**நாம் தேவனைக் குறித்து வாசிக்கலாம்! தேவனைக் குறித்துக் கேட்கலாம்! அப்படியிருந்தும் யாதொரு மாற்றமும் நமக்குள் ஏற்படாமலே இருக்கலாம். ஆனால் "அவருடைய சமூகத்தை நாம் உணரும்போது" அது முற்றிலும் வேறொரு அனுபவமாகும்! அவருடைய பிரசன்னத்தில் சகலமும் மாறுதலடையும்!**

*நான் ஒருசமயம், என்னுடைய வீட்டில் 'ராஜாக்கள் கூட' வந்து தங்கிட முடியும் என்ற எண்ணம் கொண்டிருந்தேன். ஆனால் 'ராஜாதி ராஜா' என் வீட்டிற்குள் வந்தபோதோ, அவருக்கு என் வீடு தகுதி யில்லாததைப்போல் உணர்ந்தேன். இதைப்போலவே நான் தேவனை பூரண பரிசுத்தராய் கண்டு உணராத பட்சத்தில் "***பாவம் எனக்கு மிகுந்த பாவமாய்***" *உணர்ந்திட முடியாது (ரோமர்.7:13). தேவனுடைய பரிசுத்த சுபாவத்தை நான் நேரடியாக உணர்ந்து அறியாத பட்சத்தில், என் சொந்த கேடான சுபாவத்தை நான் விளங்கிக் கொள்ளவே முடியாது!*

*நாம் யாராயிருந்தாலும் "அவரைக் கண்ட மாத்திரத்தில், செத்த வனைப்போல அவருடைய பாதத்தில் விழுவதைத் தவிர" வேறு வழி இல்லை (வெளி.1:17). 'அதுவரைக்கும்' நம்முடைய அகந்தையான மாயமே நிறைவாய் நம்மை ஆட்கொண்டிருக்கும்! "மனுஷ கை விரல்கள் தோன்றி, ராஜ அரண்மனையின் சுவற்றில் எழுதியபோது...." அதைக் கண்ட பெல்ஷாத்சார் ராஜாவின் முழங்கால்கள் ஒன்றோ டொன்று மோதிக்கொண்டது!" (தானி.5:5,6).* **கர்த்தரை நாம் காண்பது, அப்படியொரு தெய்வபயம் நம் ஆவியை சலனப்படுத்தும்!** *அவரின் ஒளி பிரகாசத்தில், நம் அருவருப்பைக் கண்டு, வெட்கத்தால் நிறைந்து, முகங்குப்புற விழுகிறோம். நம்மீது ஒட்டியுள்ள கறைகளும், சுருக்கங்களும் (திறைகளும்) கண்டு நம்மை அருவருக்கிறோம். இப்போது நாமும் தானியேல் கூறியதைப்போலவே "நான் தனித்து விடப்பட்டு அந்தப் பெரிய தரிசனத்தைக் கண்டேன். என் பெலனெல்லாம் போயிற்று! என் அருவருப்பைக் கண்டு திடனற்றுப் போனேன்" என்றே கூறுவோம் (தானி.10:8). கர்த்தர் நம்மை சந்தித்து விட்டால், நம்முடைய 'ஒன்றுமில்லாமையை' கண்ணுற்று "கர்த்தாவே, மனுஷன் எம்மாத்திரம்?" என்றே கூறுவோம்! (சங்.8:4).*

*தேவன் என்னை முதலாவதாக சந்தித்தபோது நடந்த மாற்றத்தை என்னால் மறக்க முடிவதில்லை! பாவத்தின் அறியாமையில் மூழ்கி இருந்த என்னை 'அந்த இரவில்' தேவன் என்னை முதல் முறையாக சந்தித்தார். அந்த சந்திப்பு தர்சு பட்டணத்து சவுலை தேவன் முதன்*

முதலாக சந்தித்ததற்கு ஒப்பாயிருந்தது.

**என்னுடைய அகங்கார குதிரையில் சென்று கொண்டிருந்த என்னை தரையில் விழும்படிச் செய்தார்.**

*அவரது ஆவியின் கண் கூசும் வெளிச்சத்தில் 'என் குருட்டுத் தன்மையை' உணர்ந்தவனாய் "ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்? (அப்.9:6). நானோ, இதுநாள்வரை கர்த்தருக்கு முரட்டாட்டம் செய்து, என்னால் முடிந்த அனைத்து தீமைகளையும் ஒளிப்பிடத்தில் செய்து* **முள்ளில் உதைத்து** *வாழ்ந்திருக்கிறேன்" (வச.5). என, என் கேடான ஜீவியத்தை அவருடைய பிரசன்னத்தில் உணர்ந்தேன். என் ஆத்துமாவோ, சொல்லிமுடியா வேதனையில் தத்தளித்தது.*

**என்னைச் சந்தித்த இயேசுவின் கண்கள் என்னை ஆழமாய் துருவி ஆராய்ந்ததைப் பார்த்தேன். என்னில் மறைந்திருந்த துன்மார்க்கங்களையெல்லாம் வெளிச்சத்தில் கொண்டு வந்தார்! நான் தூரச் சென்று மனங்கசந்து அழுதேன்!**

*கர்த்தர் ஆதாமை அழைத்த போது, சர்வ வல்லவரின் முகத்திற்கு முன்பாக 'நிர்வாண தோரணையில்' இருந்தான். அதுபோலவே நான் கர்த்தருக்கு முன்பாக என் சுயநீதி அனைத்தையும் உரிந்து போட்டவனாய் நின்றேன். கர்த்தரோ நம் 'முதல் பெற்றோரை' மிருகத்தின் தோலினால் உடுத்தினதைப்போலவே, என்னையும் தமது மிகப்பெரிய தியாகத்தால்* **நீதியின் வஸ்திரம் கொண்டு** *என்னை உடுத்துவித்தார். அந்த இரவில் கர்த்தரைப் பாடி மகிழும் 'புதுப்பாடல்' என் நாவில் உதித்தது!*

*பிரியமானோரே, இந்த நிகழ்ச்சி ஒரு நாள் அல்ல, நரைமுடி நிறைந்த போதகனாயிருக்கும் நான் இன்றுவரை அவரைச் சந்திக்கும் நிரந்தர நிகழ்ச்சியாயிருக்கிறது. அவர் வருவார்! நான் அவரை தரிசிப்பேன்! முகங்குப்புற விழுவேன்! என் சுயநீதி அகற்றி தேவ நீதியால் உடுத்துவார்! அவரை துதிக்கும் புதிய பாடலை என் நாவில் தருவார்! ஆ, அவருடைய பிரசன்னத்தில் வாழும் இந்த ஒப்பற்ற ஜீவியம் எனக்குண்டானது போலவே, உங்கள் யாவருக்கும் தேவன் அருள் செய்வாராக!*

– *C.H. ஸ்பர்ஜன்*

---

## வாழுமிடமெல்லாம், அபிஷேகம் பெற்ற ஊழியர்கள் வேண்டும்!

அபிஷேகம் பெற்ற ஊழியர்கள் "முழு நேரமாய்" சபைகளில் மாத்திரமல்ல, பற்பல துறைகளிலும் வேலை செய்து 'கர்த்தருக்கு ஊழியம் செய்ய' வேண்டியது அவசியம். இவ்வாறு இருப்பதே, எந்த உண்மை கிறிஸ்தவனுக்கும் கிடைத்த பெரிய சிலாக்கியம். அழைப்பு

*பெற்ற மிஷனெரிமார், போதகர்கள், கல்விச்சாலைகளில் உபாத்தி மார்களாகவும், கைத்தொழிற்சாலையின் நிர்வாகிகளாகவும், விவசாயத் தொழில் பயிற்றுவிக்கும் உத்தியோகஸ்தராகவும், அச்சு வேலையை நடத்தும் அதிகாரிகளாகவும் இருந்திட முடியும். அவர்கள் இவ்விதமான வேலைகளில் ஈடுபடுவது தவறென்று நாம் ஒருக்காலும் சொல்ல முடியாது. பவுல் கூடார வேலை செய்யவில்லையா?* **எல்லா இடங்களிலும் ஆண்டவருக்குச் சாட்சிகள் வேண்டும்!** *எல்லாரும் பிரசங்கித்திட அழைக்கப்பட்டவர்கள் அல்ல! ஆகையால் ஒரு போதகருக்கில்லாத சிலாக்கியமும் சந்தர்ப்பமும் பற்பல வேலைகளில் ஈடுபட்டிருக்கும் அவரது தாசர்களுக்கு கிடைத்திருக்கிறது! இனியாவது, அரசுப்பணி இன்னும் பல்வேறு பணியிலிருக்கும் நீங்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்திட துவங்குங்கள்!*

**கூடார வேலை செய்த பவுலுக்கு ஆத்துமாக்கள் ரட்சிக்கப்பட வேண்டுமென்பதுதான் அவர் ஜீவியத்தின் ஒரே நோக்கமாயிருந்தது!**

*ஆம், நாம் எந்த வேலையிலிருந்தாலும் மற்றவர்களை ஆண்டவரிடம் நடத்தும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்க வேண்டும். கிறிஸ்து நமக்குள் வசிப்பது உண்மையானால் உங்களோடு வேலை செய்யும் நபர்களை கிறிஸ்துவுக்குள் நடத்தும் வாஞ்சை தானாகவே வரும்! இதிலே நாம் தவறுவோமானால், மற்ற அரசு வேலைகளை நடத்துவதில் நாம் எவ்வளவு சாமர்த்தியமுள்ளவர்களாயிருந்தாலும், 'நல்லாசிரியர்' விருது பெற்ற ஆசிரியராயிருந்தாலும்....*

***ஆண்டவர் உங்களை சாட்சியாய் நிறுத்தி, ஆத்துமாக்களை கிறிஸ்துவுக்குள் நடத்தும்படி அழைத்த அழைப்பு வீண் என்றே கூற வேண்டும்!***

*ஆத்துமாக்களை கிறிஸ்துவுக்குள் கொண்டு வரும் பணியை செய்யாமல், புறம்பான ஊழிய வேலைகளை மாத்திரம் செய்தால் போதும் என்று நினைப்போமானால், பிரசங்கியே, உன்னை விட திறமைசாலிகள் நமக்குள் இருக்கவேயிருக்கிறார்கள். ஓர் மிஷன் பாடசாலையில் மாணாக்கருக்கு வேதபாடம் கற்பிக்க புறமதஸ்து உபாத்தியாயர் ஒருவரை ஏற்படுத்தியிருந்தார்கள். மற்றப் பாடங்களைப் போலவே 'வேத பாடத்தையும்' அவர் திறமையாகக் கற்றுக் கொடுத்தார். ஆனால் மாணாக்கரில் ஒருவரையாவது ரட்சிப்பின் வழியில் அவர் நடத்தினவரல்ல! அவரைக் குற்றப்படுத்த முடியாது. ஏனென்றால், அவர் கிறிஸ்துவை அறிந்தவருமல்ல, ரட்சிக்கப்பட்டவருமல்ல!* **ஆனால் ஊழிய அபிஷேகம் பெற்ற சபையிலுள்ளவர்கள்,** *விசாரணைக்குட்பட்ட சபை மக்களின் ரட்சிப்புக்காக கவலைப் படாமல், புறம்பான வேலைகளைச் செய்வதே போதும் என்றிருந்தால்*

**அவர்கள் அபிஷேகம் பெற்றது எதற்காக?** நாம் எந்த வேலையிலிருந்தாலும் கிறிஸ்துவோடுள்ள அன்பிலும் ஐக்கியத்திலும் நிலைத்திருப்போமானால், நாம் அறியாமலே நமது ஜீவியம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கும். நாம் மிகுந்த கனிகளைக் கொடுக்கும்படியும் ஆண்டவர் அருள் செய்வார்.

*சபை ஊழியம் செய்பவர்களில் சிலர், உலக விவகாரங்களில் அதிகச் சிரத்தையுள்ளவர்களாயிருக்கிறார்கள். இரு பிரிவான குழுவினரை வைத்துக்கொண்டு விசாரணை செய்வதிலும், நியாயஸ்தலம் வைத்திருப்பதுபோல் சிலருடைய பிரச்சனைகளை வழக்காடுவதிலும், சபையாருக்கு வீடுகள் நிலங்கள் வாங்குவதிலும் விற்பதிலும் தொடங்கி, மாப்பிளை பெண் பார்ப்பது முதற்கொண்டு, அதிக உற்சாகம் காட்டுகிறார்கள்! ஜனங்கள் தங்கள் வழக்குகள் பிராதுகளை எடுத்துக்கொண்டு இந்த பிரசங்கியாரிடம் வந்த வண்ணமாயிருப்பார்கள்! கர்த்தருடைய ஊழியத்தைப் பார்க்கிலும் "அவர்களின் ஆத்துமாக்களை" எச்சரித்து நடத்துவதைப் பார்க்கிலும், இப்படிப்பட்ட காரியங்களில் இவர்களுக்குப் பிரீதி அதிகம்! ஆவிக்குரிய இரட்சிப்பின் வேலையில் இவர்கள் படுமோசம்! 'மாம்சத்துக்குரியவர்கள்' ஆத்துமாக்களுக்கு உதவும் வேலையை எப்படிச் செய்ய முடியும்?*

**இவர்களுக்குள்ள வேத அறிவும், உபதேச திறமையும் என்ன பிரயோஜனம்? இவர்கள் தங்களை ஆண்டவருக்குப் பூரணமாய் ஒப்புக்கொடுத்து, தங்கள் வரங்களை சபையாரின் ரட்சிப்புக்கென்றும், சபை கட்டப்படுவதற்கும் உபயோகிப்பார்களானால், அதுவே எவ்வளவோ பாக்கியம்!**

*அப்படியில்லையென்றால், அவர்களின் ஆத்துமாவை விசாரிக்கிற ஊழியத்தை விட்டு விலகி, தங்கள் வேத அறிவுக்கும் திறமைக்கும் ஏற்ற வேறு வேலைகளைத் தெரிந்துகொண்டு, தங்கள் பிழைப்பை நடத்துவது உத்தமம். அப்படிச் செய்யாமல், கிறிஸ்தற்ற ஊழியர்களாகிய இவர்கள் வழக்கம்போல் வேலை செய்துகொண்டு "ஆத்துமாக்களை விசாரியாமற் போவார்களானால்" சபைகள் பாழாய் போகும்!* **உத்தம ஊழியர்களாயிருந்து பணி செய்ய வேண்டிய சபைகளில், கிறிஸ்தற்ற ஊழியர்கள் இருப்பதைப்போல் மோசமான காரியம் வேறில்லை.** *இவர்களைப்போலவே சபையாரும் உலக மக்களாயிருக்கிறார்கள்! "ஓ கர்த்தாவே, அபிஷேகத்தில் நிறைந்து, ஜனங்களை ஆவிக்குரிய ஜீவியத்திற்குள் நடத்தும் உத்தம ஊழியர்களை எங்கள் மத்தியில் எழுப்புவீராக" என்ற ஜெபமே இன்று நமக்கு அதிக தேவையாய் உள்ளது!*

*– பரமானந்தம் ஐயர்*

## சத்தியத்தின்படி வாழும் சபையில், அமருங்கள்!

*யாக்கோபு.5:14,15 வசனங்களை பிரசங்கத்துக்கு எடுத்துக் கொண்டு, பிரசங்கம் முடிந்தவுடன், ஆராதனைக்கு வந்தவர்களுக்கு எண்ணெய் பூசி ஜெபிக்க ஆரம்பித்து விட்டார் ஒரு பிரபல பிரசங்கியார்! அந்த சபையின் போதகரும், செயலற்ற நிலையில், இந்த நிகழ்ச்சிகளை கவனித்துக் கொண்டிருந்தார்! இந்த செயல்பாட்டில், வேத வசனத்துக்கும் அன்று நடந்த நிகழ்ச்சிக்கும் 'மாறுபாடு' உண்டு. இந்த 'மாறுபாடு' அந்த சபையில் இருந்த யாருக்குமே தெரியவில்லை போலும்!*

*யாக்கோபு நிருபத்தில், வியாதிப்பட்டவனே மூப்பர்களை தன் வீட்டுக்கு அழைத்து, அந்த மூப்பர் தன்னுடைய ஜெபத்தில் வியாதிப் பட்டவரின் தலையில் எண்ணெய் பூசி ஜெபம் செய்வார். அச்சமயம், அந்த சகோதரனின் சுகத்திற்குத் தடையான பாவத்தையும் சுட்டிக் காட்ட, அவன் மனந்திரும்புவான்! இதுவே, அந்த வசனத்தின் உண்மையான எளிய வேத விளக்கம்...*

> **ஆனால், வேத வசனத்துக்குப் புறம்பாக, அந்த பிரசங்கியார் செயல்பட்டதை, தன்னை விசுவாசி என சொல்லிக்கொள்ளும் ஒவ்வொரு கிறிஸ்தவனும், அன்றைய உத்தம பெரோயா கிறிஸ்தவர்களைப் போலவே, சபையில் நடந்த நிகழ்ச்சிகளை வேத வசனத்தோடும் சத்தியத்தோடும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்... அதை ஏன் அந்த சபை மக்கள் செய்யவில்லை? அந்த ஊழியரும் ஏன் செய்யவில்லை?**

*இன்னும் அதிகமாய், தனியொரு இடத்தில் மட்டும் சொல்லப் பட்ட வார்த்தையை அல்லது வசனத்தை வைத்துக் கொண்டு, தங்கள் மனம் போல புதிய உபதேசத்தை மக்கள் முன்பு வைப்பதும், அவர்களை ஏமாற்றி வலியுறுத்துவதும் இன்று எங்கு பார்த்தாலும் மலிந்து கிடக்கின்றது! முழு வேதத்தையும் சீர்தூக்கிப்பாராமல், இதுபோன்ற* **தனி வசன விளக்கங்கள் எக்காலத்திலும் மறுக்கப்பட வேண்டும்!**

*அன்று வனாந்தரத்தில் தோன்றிய பிசாசு, வேத வசனத்தின் 'பாதியை' எடுத்துக் கையாண்டு, இயேசுவையே சர்ச்சைக்கு இழுத்ததைப் பாருங்கள்! வசனத்தின் ஒரு சொல்லை அல்லது ஒரு சொற்றொடரை... வசனத்தின் முன், பின் பகுதியோடு ஒப்பிடாமல், பிரித்தெடுத்து மேற்கோள்காட்டும் துணிகரம் பேய்த்தனத்திற்கு சமமானது! அதை ருசிகரமாய் விரும்பிக் கேட்போர், நிச்சயமாய் வஞ்சிக்கப்படுவர்!*

*இதைவிட கொடியதாய், வேதத்தில் சொல்லப்பட்ட தீர்க்க தரிசனங்களை தங்கள் இஷ்டம்போல் கையாண்டு, தாங்களே அதற்கு நேரடி விளக்கம் செய்வதும், உலக சரித்திர நிகழ்வுகளைத் தங்கள் யூக அடிப்படையில் சம்பந்தப்படுத்திப் பேசுவதும் இன்றைய கொடுமை யிலும் கொடுமை! தாங்கள் சொன்னபடியே எல்லாம் நிறைவேறி வருவது போன்ற பிரமையை மக்களுக்கு ஏற்படுத்தி, ஏதேதோ தாங்கள் செய்யும் ஊழியத்திற்கு ஜனங்களிடம் குளிர்காய்கிறார்கள்!*

*காணிக்கை, வாக்குப்பணம், பொருத்தனை என, பேதையான கிறிஸ்தவர்களும், இந்த போலிகளின் ஊழியங்களுக்கு "கதகதப்பு ஏற்றி" தீமையை ஆதரிக்கிறார்கள்!! இக்காலத்தில் இதுபோன்ற விதமாய் "தேவமக்கள் வஞ்சிக்கப்படுவது" கிறிஸ்தவ சபைகளிலும், கூ.ஏ பிரசங்கங்களிலும், நுஏனு, மற்றும் புத்தக செய்திகளிலும் தலை விரித்து ஆடுகிறது.*

**இன்றைய பெரும்பாலான கிறிஸ்தவர்கள், தங்கள் அபிமானத்திற்குரிய ஊழியர்களிடம் கண்மூடியாய் ஒட்டிக்கொண்டு "இவரே சொல்லிவிட்டார்!" என சத்தியத்திற்கு பாராமுகமாய் இருந்து விடுகிறார்கள்!! 'அன்றொருநாள்' ஒத்தவேஷத்தை கடிந்து கொண்டவர்களும்கூட.... என்ன சம்பவித்ததோ புரியவில்லை, இவர்களும் ஒத்தவேஷ போர்வைக்குள் நுழைய பார்க்கிறார்கள்!**

*இன்று சபையில் காணும் போட்டா- போட்டியில், தங்களுக்கு ஆள் சேர்த்திட* **"பிறரை குழப்பி விட்டால் போதும்"** *என, சுவிசேஷ மகிமையை இழந்த, குறுக்குவழி போதகர்களும் ஏராளம் பெருகி விட்டார்கள்!*

*இனி காலம் கொடிது! வேத புரட்டர்களும், குழப்பவாதிகளும் பெருகிக் கொண்டேதான் போவார்கள்! அவர்களைத் தனியே விட்டுவிடுங்கள், தேவன் அவர்களைப் பார்த்துக் கொள்வார். ஆனால்... தாங்கள் வஞ்சிக்கப்படாதபடி, தேவ பயத்தோடு, தாங்கள்* **கேட்கும் செய்திகளை, வேதவாக்கியங்களோடு ஒப்பிட்டு பார்க்கும் "பெரோயா பட்டண சபையார்" இன்று எங்கே இருக்கிறார்கள்?** *அந்த ஆதி உத்தம பெரோயா சபைக்கு ஒப்பாய், எங்காவது ஒரு சபை கண்டால், சொல்லுங்கள்! ஆம், சுவிசேஷம் அறிவிப்பதுபோல், ஏராளமான கிறிஸ்தவர்களுக்கு அந்த சபையை குறிப்பிட்டு எடுத்துச் சொல்லுங்கள். ஏக்கம் கொள்ளுங்கள்... இந்த உத்தம பெரோயா சபையார் போலவே, இன்றைய கொடிய வஞ்சக நாட்களில், யாதொரு செய்தியையும் வேத வாக்கியத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் 'உத்தம கிறிஸ்தவம்' மறுமலர்ச்சி பெற ஏக்கம் கொள்ளுங்கள்! ஜெபியுங்கள்!*

*– கிறிஸ்துவின் ஸ்தானாபதி*

## பிரசங்க ஆசை வேண்டாம்! உங்கள் ஜீவியமே பிரசங்கம்!

ஒருமுறை, பக்தனாகிய *பிரான்சிஸ் அசிஸியிடம்* ஒரு இளம் கிறிஸ்தவ வாலிபன் வந்து, "எனக்கு உங்களுடன் வந்து, உங்களைப் போலவே **பிரசங்கம் செய்திட ஆசை!**" எனக்கூறினான். அதற்கு அவர், பதில் ஒன்றும் சொல்லாமல், மெல்ல சிரித்துக்கொண்டார். ஆகிலும், இந்த வாலிபன் *பிரான்சிஸ் அசிஸியிடம்* அடிக்கடி வந்து தனது பிரசங்க ஆசையை குறிப்பிட்டுக் கூறினான். ஒவ்வொரு முறையும், பக்தன் *பிரான்சிஸ் அசிஸி,* அந்த வாலிபனின் முகத்தை கூர்ந்து கவனித்து லேசாக சிரித்துக்கொள்வார், அவ்வளவுதான்!

திடீரென்று ஒருநாள், பக்தன் *பிரான்சிஸ்* "பிரசங்கம் செய்திட தன்னுடன் வரும்படி" அந்த வாலிபனுக்கு அழைப்பு கொடுத்தார். பரவசமடைந்த அந்த வாலிபன், **பிரசங்க குறிப்புகளடங்கிய ஒரு புத்தகத்தோடும், கையடக்கமான ஒரு வேதாகமத்தோடும்...** ஒரு பிரசங்கியைப் போன்று சுத்தாங்கமாய் உடுத்தி, *பிரான்சிஸிடம்* சென்றான். "*பிரான்சிஸ்* ஐயா, எனது நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றியதற்கு நன்றி. நாம் இப்போது எங்கே பிரசங்கிக்க செல்கிறோம்?" எனக்கேட்டான். "வாருங்கள், போகலாம்!" என *பிரான்சிஸ்* அவர்கள் கூற, அந்த வாலிபன் உடன் நடந்தான். அப்போது **ஒரு ரஸ்தாவை கடந்துசெல்லும்** குறுக்குப் பாதையில் நின்றனர். போக்குவரத்து குறைவாய் இருந்தபடியால் 'சிக்னல்'சிகப்பு காட்டியபோதும் அந்த வாலிபன் வேகமாக நடந்துவிட்டான். பக்தன் *பிரான்சிஸோ...* மஞ்சள் சிக்னலுக்கு பிறகு பச்சை சிக்னல் தோன்றிய பிறகே கடந்துவந்தார். பின்பு பிரான்சிஸ் அவர்கள் **ஒரு காய்கறி மார்க்கெட்டிற்குள்** சென்று, ஒரு கடையில் அரைகிலோ 'டர்னிப் காய்' வாங்கினார். அவரோடு வந்த வாலிபன் "ஏன் இவ்வளவு சரியாக எடை போடுகிறீர், இன்னொரு காய் போடுமென" அதட்டி கேட்டான். *பிரான்சிஸோ,* "இல்லை, சரியான அளவு போட்டால் போதும்!" எனக்கூறியதும், அந்த கடைக்காரன் பிரான்சிசை பார்த்து புன்னகையுடன் 'தாங்க்ஸ்' எனக்கூறினார்.

**பின்பு எலக்ட்ரிக் ட்ரெயின் ஏறவேண்டிய தருணத்தில்** வண்டியோ மெல்ல நகரத் தொடங்கியது. ஒரு வயதான பெண்மணி, வாசலில் ஏறவந்ததும், அந்த வாலிபன் இந்த அம்மையாரை ஒதுக்கி ஏற முயற்சித்தான்! அதற்கு பிரான்சிஸ் "வேண்டாம், அம்மையார் ஏறட்டும். நாம் அடுத்த வண்டியில் ஏறலாம்" எனக்கூற, அந்த அம்மையார் தன் தலையின் தொப்பியை அகற்றி பிரான்சிஸிற்கு தன் மரியாதையைக் காட்டினார்.

பின்பு அந்த வாலிபன் பிரான்சிஸ் ஐயாவிடம் திரும்பி, "பிரசங்கம் செய்ய இன்னும் எவ்வளவுதூரம் போக வேண்டும்" எனக்கேட்டான். ஒரு சிறிய புன்னகையோடு "போகவேண்டிய தூரம் வெகு தூரம்..." என கூறி பெருமூச்சு விட்டார்.

**ஒரு குறுகிய வீதியின் வழியாய்** சென்றபோது, அங்குள்ள ஜனநெருக்கடியில் அந்த வாலிபன் அநேகரை முண்டிமோதி முன்சென்றான். பிரான்சிஸ் ஐயாவோ கவனத்துடன் பொறுப்பாய் யார்மீதும் மோதாமல் நடந்துவந்தார்.

காலையில் நடக்கத் துவங்கிய இருவரும், மதிய நேரத்தில் ஆளுக்கொரு பானம் அருந்திவிட்டு, தொடர்ந்து நடந்தனர். அப்போது அந்த வாலிபன் சற்று ஏமாற்றம் அடைந்தவனாய் "நாம் எந்தப் பட்டணத்திற்குச் சென்று பிரசங்கிக்கவேண்டும்?" எனக் கேட்டான். அதற்கு பிரான்சிஸ் "சகோதரா, நாம் ஏற்கனவே பிரசங்கித்து விட்டோம்! அந்த ரஸ்தா தொடங்கி... நூற்றுக்கணக்கான ஜனங்களை தாண்டி வந்துவிட்டோம்! அந்த பலநூறு ஜனங்கள் நமது சுபாவங்களை கவனித்துப் பார்த்துவிட்டார்கள்.

**எனதருமை இளைஞனே, நாம் எங்கோ பிரசங்கிக்க நடந்துசெல்வதில் பயன் ஏதும் இல்லை. அதற்குப் பதிலாக, நாம் எங்கெல்லாம் நடந்து செல்கிறோமோ, அங்குதான் நமது 'ஜீவியபிரசங்கம்' தொனிக்க வேண்டும்!**

இனிவரும் நாட்களில் "உனது ஜீவிய நடையைக் குறித்து கவனம் கொள். அதுவே பிரதானமான பிரசங்க தேவையாகும் என்பதை அறிந்துகொள்" எனக்கூறியவுடன், அந்த இளைஞன் "நான் உணர்வடைந்தேன், திருந்தி நடப்பேன்"என மரியாதையுடன் கூறி மகிழ்வுடன் விடைபெற்றான்.

– பிரான்ஸிஸ் ஆப் அசிஸி

---

## பரம குடும்பத்தில் 'சகோதர அன்பு' நிலைத்திருக்கும்!

**வே**தம் வெளிப்படுத்தும் "சகோதர சிநேகம்" தெய்வீகமானது! (எபி.13:1). ஏனெனில் '**தெய்வீக** சகோதர சிநேகம்' மாத்திரமே நிலைத்திருக்கும்! ஆகவே "**மனுஷீகத்தை** அன்பாகவும் ஒற்றுமையாகவும்" வைத்திருக்கும் சிநேகம் நிலைத்திருப்பதில்லை!

நம்மைப்போலவே சோதிக்கப்பட்டு, உபத்திரவங்களினாலே பூரணமடைந்த இயேசு, கொண்டிருந்த நோக்கமெல்லாம் "தன்னைப் போலவே உபத்திரவங்களினாலே பரிசுத்தமாக்கப்பட்டு பூரணமடையும்" **அநேகம் குமாரர்களை** மகிமைக்குள் கொண்டுவரும் நோக்கமேயாகும்! (எபி.2:10). இதுவே, இயேசு இந்த பூமிக்கு வந்து,

தன் பிதாவுக்கு செய்த ஊழியத்தில் கொண்டிருந்த 'புனிதமான நோக்கம்' என்று கூறிட வேண்டும்! இயேசுவைத் தொடர்ந்து 'சபை' இந்த நோக்கத்தை முன்வைத்தே ஊழியம் செய்கிறது! அனல்கொண்ட கிறிஸ்தவனின் நெஞ்சில் பற்றி எரியும் நோக்கமும் இது ஒன்றேயாகும்! 'தன்னைப்போலவே' உபத்திரவங்களில் பரிசுத்தமாகி வருபவர்கள் எவர்களோ, அவர்களை இயேசு "**என் சகோதரர்கள்**" என கூறிட வெட்கப்படுவதில்லை! என எபிரெயர் *2:11,12* "ஒரே குடும்ப சகோதரத் துவத்தை" முரசொலிக்கும் தொனியை செவிகுளிர கேளுங்கள்!....

**அது, பரம பிதாவின் குடும்பத்தில், இயேசு மூத்த முதல் சகோதரனாகவும், நம்மை அவரது இளைய சகோதரர்களாகவும் அறிவிக்கும் ஜெய தொனி!**

"குமாரனுடைய சாயலை" இந்த பூமியில் பெற்றிட வாஞ்சிக்கும் மாந்தர்கள் எவர்களோ, அவர்களே "பரத்தின் ஒரே குடும்ப பந்தத்திற்குள்" அழைக்கப்பட்டு, முன் குறிக்கப்பட்டவர்கள்! இவர்களே, இப்பூமிக்குரிய தங்கள் வாழ்வில் தேவன் அனுமதிக்கும் சகலத்தையும் "தேவனுடைய கிரியை என" யாதொரு முறுமுறுப்பும் இல்லாமல் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்கள்! இவ்வாறு, தெய்வ அன்பை தங்களின் சோதனை, துன்ப நேரங்களில் இழக்காத இவர்களுக்கே "சகலத்தையும் (எவ்வித உபத்திரவத்தையும்) **நித்திய நன்மைக்கு** ஏதுவாகவே தேவன் கிரியை நடப்பிப்பார்!" என ரோமர் *8:28,29* ஆணித்தரமாய் கூறுகிறது. ஆம், நாம் அடைந்திடும் நித்திய நன்மை "**குமாரனுடைய சாயலே!**" ஆகும்.

உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ ஆகிய யாதொன்று சம்பவித்தாலும் "எங்களை அன்புகூருகிறவர்!" என்ற தெய்வ அன்பிலிருந்து, எதுவும் எங்களைப் பிரித்திட முடியாது! என அறிக்கை செய்து ஜெயங்கொள்ளுகிறார்கள்!

**அவரை நேசிப்பதும், அவரால் நேசிக்கப்படுவதுமாகிய நித்திய அன்பிற்கு "குமாரனுடைய சாயலைப் பெற்றவர்களுக்கே" உரிய குடும்ப பந்தமாகும்!**

இந்த தெய்வ அன்பின் ஆதாரத்தைக் கொண்டே "தம்முடைய குமாரன் (இயேசு) அனேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராய்" இருப்பதும், நாம் அவரது 'இளைய சகோதரர்களாய்' இருப்பதும், நிலைவரப்படுகிறது! இவ்வாறு **இயேசுவை மூத்த சகோதரனாய் கொண்ட "சகோதர அன்பு"** தெய்வீகம் கொண்டதாய், என்றும் நிலைத்திருக்கும்! ஆம், சபையில் இந்த தெய்வீக மாசற்ற "சகோதர அன்பு" என்றும் நிலைத்திருப்பதாக! அதுவே, பரலோக குடும்பம்!!

– *T.ரத்தினகுமார்*

# புனித அல்பான்.

## போதகருக்கு அடைக்கலம் தந்து உயிர் நீத்த சீஷன்!



(AD 400)

ரோமானிய பிரிட்டன் நாட்டில் வாழ்ந்த அல்பான் காலத்தில், கிறிஸ்தவர்கள் கொடுமையாக துன்புறுத்தப்பட்டார்கள். 'வெர் உலாமியன்' என்ற இடத்தில் வாழ்ந்த அல்பான், கொலையாளிகளால் விரட்டப்பட்ட ஒரு கிறிஸ்தவ போதகருக்கு தன் வீட்டில் தஞ்சம் அளித்தார். அந்த போதகர் பெயர் 'ஆம்பி பாலஸ்' என்பதாகும். தன் வீட்டில் தஞ்சம் இருந்த நாட்களில், இரவு பகல் பாராது, அவர் ஏறெடுத்த உறுதியான விசுவாச ஜெபம் ரோமானியனாகிய அல்பானை மிகவும் கவர்ந்தது. அல்பான் வீட்டில் ஒரு கிறிஸ்தவ போதகர் தங்கியிருக்கிறார் என்ற செய்தியை கேள்வியுற்ற பேரரசன், போதகரைப் பிடித்து வர ரோம வீரர்களை அனுப்பினான். போதகரை தப்பிஓட மறைத்துவிட்டு, அவருடைய உடுப்பை உடுத்தி தன்னை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.

அவரை இழுத்து வந்து நிறுத்திய சமயத்தில், ரோமானிய தேவதைகளுக்குப் பலி செலுத்தி பண்டிகை கொண்டாடிய நேரமாயிருந்தது! அச்சமயம், 'அல்பான் தங்கள் தேவதைகளை அசட்டை செய்யும்' கிறிஸ்தவ போதகருக்கு புகலிடம் தந்ததைக் கேள்வியுற்ற பேரரசன் கடுங்கோபங்கொண்டு, தேவதைகளின் பலி பீடத்திற்கு முன்பாக தலை வணங்கி ஆராதித்து விடுதலை பெற கட்டளையிட்டான். ஆனால் அல்பானோ "சகலத்தையும் சிருஷ்டித்த உயிருள்ள உண்மை கிறிஸ்துவை தவிர நான் எதையும் ஆராதிக்க மாட்டேன்" என அறிக்கை செய்ததும், பல நூறு சவுக்கடிகளைத் தந்து 'இப்பொழுதாவது திருந்துகிறாயா?' என கேட்டு, அல்பானின் அசைக்கப்படாத விசுவாசத்தைக் கண்டு ஆத்திரமடைந்த பேரரசன் அல்பானின் தலையை துண்டிப்பதற்கு கட்டளையிட்டான்!

தலை துண்டிப்பை காண பெருங்கூட்டம் பின் வந்தது. 'வெர் ஆற்றை' கடக்க இருந்த சின்ன பாலம், கூடி வந்த அதிகமான மக்களை தாங்க முடியாததாய் இருந்தது. இதைக் கண்ட அல்பான், ஜெபம் செய்தவுடன் அந்த ஆறு வற்றிப்போனது. ஜனங்கள் எளிதாக அந்த ஆற்றை கடந்தார்கள். இதைக் கண்டு உள்ளம் உடைந்த கொலையாளி, தன் கத்தியை கீழே போட்டு, கிறிஸ்துவை விசுவாசித்தான். இச்செய்தி கேட்ட பேரரசன் அந்த கொலையாளியையும் தலை துண்டிக்க கட்டளையிட்டான். அல்பானின் தலை துண்டிக்கப்பட்ட அதே நேரத்தில், மனம் மாறிய கொலையாளி தன் விழியை மேலே வானத்தை நோக்கி ஏறெடுத்துப் பார்த்து, இயற்கையான மரணமடைந்தார். பிற்காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளைக் கேட்ட பேரரசன், அல்பான் வணங்கிய கிறிஸ்துவின் மீது விசுவாசமும் மதிப்பும் வைத்தான்!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## நியாயத்தீர்ப்பின் நாளில் 'நீ பதில் சொல்ல வேண்டுமே?'

வருஷத்தின் முதல் நாளிலிருந்து அதின் கடைசி நாள்வரை, தேவனுக்கென்று ஒரு சிறிய சிந்தனைகூட கொள்ளாமல் இருக்கும், கிறிஸ்தவன் ஒருவனிருந்தான்! தனது வியாபாரத்திலிருந்தும் அந்த மனிதன் தேவனை வெளியே அகற்றி விட்டான். தனது சமுதாய குடும்ப வாழ்விலிருந்தும் அவன் இயேசுவை விரட்டியோட்டி விட்டான். கர்த்தருடைய நாளாகிய ஞாயிறு ஆராதனையை களியாட்டத்தின் நாளாக்கிக் கொண்டான். தேவனுடைய வேதத்தை அவன் ஒருக்காலும் மதிப்பதே கிடையாது! மாறாக, தனக்காக மரித்த தேவ மைந்தனை, அவருடைய கிருபையை தன்னுடைய கால்களின் கீழ்வைத்து நசுக்கிப் போட்டான். தன்னை சிருஷ்டித்துத் தன்னுடைய பாவ மீட்புக்கென்று தனது ஒரே மைந்தனை சிலுவையில் மரிக்க அன்பாய் ஒப்புவித்த தேவனையே புறம்பாக்கினவனாய் இவ்வுலகில் வாழ்ந்தான்! இவ்விதமான வாழ்க்கையிலேயே அம்மனிதன் கடைசியாக மரிக்கின்றான்!

இவன், நீதியுள்ள நியாயாதிபதியின் முன் நிற்க வேண்டியதோர் நாள் இல்லை என்று நீங்கள் என்னிடம் கூறக்கூடுமோ? "என்னுடைய சபை கூடுதலை ஏன் புறக்கணித்தாய்? என்னுடைய வேதத்தின் பரிசுத்த கற்பனை கட்டளைகளை ஏன் உதாசினம் செய்தாய்? எல்லாவற்றிற்கும் மேலாக, உன் இரட்சிப்பிற்காக நான் தந்த என்னுடைய 'ஏக சுதனை' என்ன செய்தாய்?" என்ற, சர்வலோக நியாயாதிபதியின் கேள்விகளுக்கு அவன் பதில் சொல்லியே ஆக வேண்டும்!

மெய்யாகவே ஒரு நியாயத்தீர்ப்பின் நாள் உண்டு. நாம் எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானபடியால், நம் ஒவ்வொருவருக்கும் ஒரு புகலிடம் தேவை. பாவத்தின் வல்லமையிலிருந்தும், தந்திரப் பிசாசின் வல்லமையிலிருந்தும், கடைசியாக வரப்போகும் தேவ கோபாக்கினையிலிருந்தும் நமக்கோர் புகலிடம் தேவை. தன் சிலுவையில் நமக்காகவே இருகரம் விரித்த இயேசு ஒருவரே நமது புகலிடம். அவர் ஒருவரே நமக்கு பாவமன்னிப்பும், நித்திய ஜீவனும், அடைக்கலமுமாயிருக்கிறார்! ஓ வாலிபனே, அவரை நீ இன்றே அண்டிக்கொள்! நியாயத்தீர்ப்பிற்கு விலகி நில்!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்
Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.